1992 மார்ச் 11]

தாலே, இரண்டாண்டுக் காலமாக அந்த வழக்கு நிலுவையில் இருந்து கொண்டிருக்கிற காரணத்தாலே சர்வீஸ் கமிஷனிலிருந்து தேர்வு செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே இது போன்ற ஆய்வுகளை தீவிரப்படுத்துவதற்கு எங்களால் முடியாத சூழ்நிலை இருக்கிறது. எதிர்காலத்திலே இது போன்ற ஆம்னி பஸ்கள் தவறான முறையில் இயங்குவது எந்த இடத்திலேயாவது இருந்தால், உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்னி பஸ்களுக்கு அரசு உரிமம் வழங்கியிருக்கிற அதே நேரத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலேயும், இரவு நேரங்களில் இது போன்ற பல ஆயிரக்கணக்கான பஸ்கள் ஓடுகின்றன. இப்படி விதிமுறையை மீறி ஓட்டுகிற நிலைமையை அரசு உன்னிப்பாகக் கவனித்து இது வரை எந்த அளவிற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதற்கு, முதல் கேள்விக்கான பதிலிலேயே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 165. திரு. ஆர். முருகையா பாண்டியன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

165—

கோவிலுக்குச் செல்லும் வாகனங்களுக்குப் பணம் வசூலித்தல்.

*2443 திரு. ஆர். முருகையா பாண்டியன்:

மாண்புமிகுபோக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், பாபநாசம் அடிவாரத்தில் உள்ள சோதனைச் சாவடியில் கோவிலுக்கு வாகனங்களில் செல்லும் பக்தர்களிடம் பணம் வசூல் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அகஸ்தியர் கோயிலுக்கு வாகனங்களில் செல்லும் பக்தர்கள் சரணாலயப் பகுதியிலுள்ள சோதனைச் சாவடியை கடந்துசெல்வதால் அவர்களிடமிருந்து அரசு நிர்ணயம் செய்தபடி நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இப்போது இதைத் தவிர்க்கிற வகையில் அந்த சோதனைச் சாவடிகளை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

முற்பகல் 10–10.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அம்பாசமுத்திரம் தொகுதியில் பாபநாசம் அடிவாரத்தில் இருக்கிற சோதனைச்சாவடியில், அப்பகுதியில் இருக்கிற அகஸ்தியர் அருவி போன்ற அருவியில் ஏழை எளிய மக்கள் எல்லாம் குளிக்கச் செல்லும்போது கட்டணங்கள் வசூல் செய்யப்படுகிறது. அதேபோன்று கோவிலுக்கு சாமி கும்பிடப் போனாலும் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. இதை பல ஆண்டுக் காலமாக அங்குள்ளவர்கள் எதிர்த்துப் போராட்டம் செய்து வருகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த கட்டணம் வசூலிப்பதை ரத்துச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சோதனைச்சாவடியை பம்ப் அவுஸ் முண்டந்துறை என்ற இடத்திலே மாற்றி அமைப்பதற்காக அரசு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. எதிர்காலத்தில் அகஸ்தியர் கோவிலுக்குச் செல்கின்றவர்களுக்கு அவர்களிடமிருந்து அந்த வரிகள் வசூலிக்கப்படமாட்டாது. அதற்காக நடவடிக்கை மேற்கொண்டு, சோதனைச்சாவடியை கட்டுவதற்காக தொடராச் செலவாக 22.300 ரூபாயும், வனக்காவலர்களுக்கு 3 பணியிடங்கள் கட்டுவதற்காக 53 ஆயிரம் ரூபாயும் ஏறத்தாழ 75 ஆயிரம் ரூபாய் செலவில் அது கட்டி முடிக்கப்பட்டவுடன் விரைவில் அந்த இடத்திலே மாற்றி அமைக்கப்படும். எதிர்காலத்தில் அந்தக் கட்டணம் வசூலிக்கப்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 166. திரு. கி. பாலசுப்பிரமணியன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

166—

கிராம மாணவர்கள் நகரத்திற்குச் செல்ல பேருந்து வசதி